# ஸ்ரீஶைலேஶதயாபாத்ர வைபவம்

**(வேதபாஷ்யப்ரவீண வேதஸாரஜ்ஞ ஸலக்ஷணகநபாடி ஸ்ரீ.உ.வே. ஸௌரிராஜய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்)**

**ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம்**
**தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம்।**
**யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$**
**ரம்யஜாமாதரம் முநிம்॥**

ஸாதாரண ஆண்டு ஐப்பசித் திருமூலம் – விஶதவாக்ஶிகாமணியாய் ஜகதாசார்யரான மணவாளமாமுனிகள் அவதரித்ததால் அஸாதாரணமான பெருமையையடைந்தது.

சில புராணங்களில் 'ப்ரபவா' முதலிய ஆண்டுகள் ஸ்த்ரீலிங்கமாகப் ப்ரயோகிப்பட்டிருக்கின்றன. அதை அநுஸரித்து 'ஸாதாரணா' என்று இவ்வாண்டின் பெயர். இதற்கு 25 ஆண்டுகளுக்கு முந்திய ஆண்டு (கேவல) ''தாரணா'', இவ்வாண்டு ஸா–தாரணா. 'ஸா' என்கிற தச்சப்தம் ப்ரஸித்தி பரம். தாரணா என்பதற்கு 'எல்லை மீறுமை' என்று கோஶத்தில் அர்த்தம் சொல்லப் பட்டது. 'மர்யாத$_3$ா த$_4$ாரணா ஸ்தி$_2$தி:'' என்று ப்ரஸித்தமான வைதிக மார்க்கத்தின் எல்லையை மீறுதவர் மணவாளமாமுநிகள் என்பறடி.

ஸகல வேததாத்பர்யமான ஸ்ரீவசந பூஷண மஹாஶாஸ்த்ர ஸாரத்தை உள்ள படி அறிந்து அநுஷ்டிப்பவர் மாமுனிகள். அதாவது – சேதனன்தான் எம்பெருமானைப் பற்றுகை ஸ்வகதஸ்வீகாரம். எம்பெருமான் தானே சேதனனை வரிப்பது – பரகத ஸ்வீகாரம் . இவை முறையே – 'மர்க்கடகிஶோர ந்யாயம்' 'மார்ஜாரகிஶோர ந்யாயம்' என வழங்கப்படுகின்றன. குரங்கு ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குப் போகும் போது குட்டியே தாயை கெட்டியாகப் பிடித்துக்கொள்வது – மர்க்கடகிஶோர ந்யாயம். பூனை ஓர் இடத்திலிருந்து வேறிடத்திற்குப் போகும் போது குட்டியை வாயால் கவ்விக் கொண்டு போகிறது; பல்படாமலும், விழாமலுமிருக்கும்படி தாய்ப் பூனையே கவ்விக்கொள்கிறது. பூனைக்குட்டி கவலையற்றிருக்கிறது. இதுவே மார்ஜார கிஶோரந்யாயம்.

பரகதஸ்வீகாரத்தை வேதமும் ஸ்ரீராமாயணமும் விஶேஷமாகக் கொண்டாடுகின்றன. தைத்திரீயஸம்ஹிதை காண்டம் 1, ப்ரஶ்நம் 6, 42ஆவது பஞ்சாதி 'ப்ரஜாபதிம் த்வோ வேத$_3$ ப்ரஜாபதிஸ் த்வம் வேத$_3$ யம் ப்ரஜாபதிர் வேத$_3$ஸ புண்யோ ப$_4$வதி'' (ஒருவன் எம்பெருமானை வரிக்கிறான்; எம்பெருமான் ஒருவனை வரிக்கிறான்; இவ்விருவருள் எம்பெருமா னால் வரிக்கப்படுமவனே பாக்யஶாலி) ஸ்ரீராமாயணம் –

**யஶ்ச ராமம் ந பஶ்யேத்து**
**யஞ்ச ராமம் ந பஶ்யதி।**
**நிந்தி$_3$த: ஸ வஸேல் லோகே**
**ஸ்வாத்மாப்யேநம் விக$_3$ர்ஹதே॥**

(எவன் ஸ்ரீராமனை ஸேவிக்கவில்லையோ, எவனை ஸ்ரீராமன் கடாக்ஷிக்கவில்லையோ அவன் நிந்திக்கத்தகுந்தவன்; அவனைத் தன் நெஞ்சே இகழும்.)

ஸ்ரீவசநபூஷணம் இரண்டாம் ப்ரகரணத்தில் 142 தொடங்கி 149 வரை யுள்ள ஸூத்ரங்களில் பரகதஸ்வீகார நிஷ்டர் வைபவம் விஶதமாக நிரூபிக்கப்

பட்டிருக்கிறது. இதுதான் வேததாத்பர்யம் என்பதை ''இவ்வர்த்தத்தை வேதபுருஷன் ஆதரித்தான்'' என்று பிள்ளைலோகாசார்யர் அறுதியிட்டார். ''நாயமாத்மா ஶ்ருதி – கடவல்லியிலும், முண்டகத்திலும் சொல்லுகையாலே ஆதரித்தான்'' என்று இவ்விடத்தில் வ்யாக்யானத்தில் மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி.

''**அயம் ஆத்மா** – பரமாத்மாவான அழகியமணவாளன், **ப்ரவசநேந மேத₃யா ப₃ஹுநா ஶ்ருதேந**–கேவல ஶ்ரவண மநந நிதித்யாஸநங்களால் **ந லப்₄ய:**–அடைய முடியாதவர், **யம் ஏவ** – எந்த ஜீவனை, **ஏஷ:**– இப்பரமாத்மா, **வ்ருணுதே** – (மாமுனி முதலானோரைப்போல்) ஆசார்யனாகவோ, (குஹன், அர்ஜுநன் முதலானோரைப்போல்) நண்பனாகவோ, (நந்தன், வஸுதேவன் முதலானோரைப் போல்) தந்தையாகவோ, (யஶோதை, தேவகி முதலானோரைப்போல்) தாயாகவோ, (கோபிகள் முதலானோரைப்போல்) மனைவி யராகவோ, (அக்ரூரமாலாகாராதிகளைப் போல்) தாஸர்களாகவோ, (ஆழ்வார்களைப் போல்) எல்லாமாகவோ வரிக்கிறானோ, **தேந** – அந்த ஜீவனாலேயே, **லப்₄ய:** – அடையத்தக்கவனாகிறான். **ஏஷ:**– இவ்வழகியமணவாளன் **தஸ்ய ஏவ** – தன் நிர்ஹேதுக கடாக்ஷத்துக்கு இலக்கான அவனுக்கே, **ஸ்வாம் தநூம்** – தன் அஸாதாரண ஸ்வரூபத்தை (ஶிஷ்யனா கவோ, நண்பனாகவோ, பிள்ளையாகவோ, கணவனாகவோ, யஜமானனாகவோ, எல்லாமாகவோ இருக்கும் தன்மையை) **விவ்ருணுதே** – ப்ரகாஶிப்பிக்கிறான்'' என்பது நாயமாத்மாஶ்ருதியின் பொருள்.

அழகியமணவாள மாமுனிகளை அதிவிலக்ஷணமான முறையில் ஆசார்யராக வரித்து, அவரிடம் ஈடு முப்பத்தாறாயிரப்படி காலக்ஷேபம் செய்தார் பெரியபெருமாள். அதற்காகத் தான் ஒருவருஷ காலத்துக்குத் தன் உத்ஸவங்களையெல்லாம் நிறுத்தி, மாமுனிகளை வடக்குமுகமாக ஆசார்ய பீடத்தில் எழுந்தருளப்பண்ணி, பிராட்டி மாருடன் கூடிய தான் கிழக்குமுகமாக எழுந்தருளித் திருச்செவி சாத்தியருளினார். காலக்ஷேபம் பூர்த்தியானவுடன் குழந்தை யுருவில் தோன்றி ''ஸ்ரீஶைலேஶ'' தனியனையும் அருளிச்செய்தார். இப்படி ஸ்ரீஶைலேஶதயாபாத்ரரை அதிவிலக்ஷ ணமான முறையில் ஆசார்யராக வரித்ததே ஸ்ரீஶைலேஶ தயாபாத்ர வைபவம்.

''பரகதஸ்வீகாரம் ஶாஸ்த்ர விருத்தம்; ஸர்வகாலத்திலும் ஶேஷபூதனான சேதநனைப் பரமாத்மா ஆசார்யனாக வரிப்பதும், இவர் இசைந்திருப்பதும் யுக்தமன்று'' என்று ஶங்கை உதிக்கலாம். ஶாஸ்த்ரங்களில் எம்பெருமான் பலரை ஆசார்யராகவும், தாய்தந்தையராகவும் நண்பன் முதலானோ ராகவும் தானே சென்று வரித்திருப்பதைக் கண்டாலே இந்த ஶங்கை தீரும். ஆழ்வார்கள், ஆளவந்தார், பிள்ளைலோகா சார்யர் முதலானோருடைய ஸ்ரீஸூக்திகளை ஸேவித்தால் இதுவே பரமவைதிக ஸித்தாந்தம் என விளங்கும்.

எம்பெருமான் சில ஸமயங்களில் சில வ்யக்திவிஶேஷங்களில் அதீதமான ஸத்காரங்களைச் செய்து ஸந்தோஷிக்கிறான். அந்த வ்யக்திவிஶேஷங்கள் எல்லாரு

டைய ஸத்காரத்துக்கும் பாத்ரமாகின்றனர். அவர்களை எம்பெருமானைப் போல் (எம்பெருமானாகவே) ஸத்கரிக்க வேண்டும் – என்பதற்கு ''ஆசார்யதே$_3$வோ ப$_4$வ'' ''தே$_3$வமிவ ஆசார்யம் உபாஸீத'' என்னும் ஶ்ருதிகள் ப்ரமாணம். ''என்னை யொழிய என்னில் முன்னம் பாரித்துத் தான் என்னை முற்றப்பருகினான்'' என்றவிடத்தில் நம்மாழ்வார் தாம் பரகதஸ்வீகார விஷயமானபடியைப் பேசினார். இவ்விடத்து வ்யாக்யானங்களை ஸேவித்துத் தெளியலாம். ''மம நாத$_2$ யத$_3$ஸ்தி யோஸ்ம்யஹம் ஸகலம் தத்$_3$தி$_4$ தவைவ மாத$_4$வ – நிகி$_2$லஸ்வமிதி ப்ரபு$_3$த்$_3$த$_3$தீ$_4$: அத$_2$வா கிந்நு ஸமர்ப்பயாமி தே'' என்று ஆளவந்தாரும் ஸ்வகத ஸ்வீகாரம் அபாயமேயொழிய உபாயமன்று என்பதையும், பரகதஸ்வீகாரமே உபாயம் என்றும் காட்டியருளினார். பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீவசநபூஷணத்தில் பரகதஸ்வீகாரத்தின் பெருமையை விரிவாக நிரூபித்திருக்கிறபடியை முன்னமே காட்டினோம்.

''ஆட்கொள்வானொத்து என்னுயிருண்ட மாயன்'' என்கிறபடியே தன்னோடு கலந்து பரிமாறும் தசையில் அடிமை கொள்வாரைப் போலே புகுந்து தன் வ்யாமோஹத்திலே தாழநின்று பரிமாறி, இத்தலையில் ஶேஷத்வத்தை அழிக்கும் போது, 'நம் ஶேஷத்வத்தை நாம் நோக்க வேணும்' என்று நைச்யம் பாவித்து இருய்த்து அவன் போகத்தை அழியாதொழியவேணுமாகையாலும் நம் உகப்பையொழிய அவன் உகப்பே புருஷார்த்தமென நிஷ்கர்ஷிக்கப் பட்டிருக்கையாலும் மாமுனிகள் இசைந்திருந்ததிலும் குறையில்லை.

விபவத்திலும் அர்ச்சாவதாரத்திலும், பலரிடத்தில் ஶிஷ்யவ்ருத்தி செய்து உகந்திருக்கிறான் எம்பெருமான். விபவத்தில் வஸிஷ்டர், விஶ்வாமித்ரர், ஸாந்தீபினி முதலானோர்க்கு ஶிஷ்யனானான்; திருக்குறுங்குடி வைஷ்ணவநம்பி எம்பெருமானார்க்கு ஶிஷ்யனாய் உகந்தார். திருக்கண்ணமங்கை பத்தராவிப் பெருமாள் ''கண்ண! நின்றனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள் தானே'' என்ற திருமங்கையாழ்வாருக்கு அவதாராந்தரத்தில் ஶிஷ்யரானார். ஆனால் மாமுனிகள் ஒருவரிடத்திலேயே நம்பெருமாள் நேரேயே பரிபூர்ண ஶிஷ்யவ்ருத்திசெய்து உகந்தருளித் தனியனையும் அருளிச்செய்து, தான் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்குமிடமெங்கும் இத்தனியன் தன் முன்பு ஸேவிக்கத்தக்கது என நியமித்தருளினார். பிரதிதினமும் விஶ்வரூபத்தில் ஸ்வாசார்யன் தனியனைத் திருச்செவிசாத்திய பிறகுதான் பஞ்சாங்க ஶ்ரவணம் செய்தருளுகிறார். இதுவே ஸ்ரீஶைலேஶதயாபாத்ரருக்கு உள்ள தனிப்பெருமை, இது தன்னை 'தென்னரங்கர் சீரருளுக்கு இலக்காகப் பெற்றோம்' என்று மாமுனிகள் தாமும், அவரது ஶிஷ்யப்ரஶிஷ்யர்கள் பல பல நூல்களிலும் வெளியிட்டருளினார்கள்.

**ஸ்ரீமதே ரம்யஜாமாத்ரு**
**முநீந்த்ராய மஹாத்மநே।**
**ஸ்ரீரங்கவாஸிநே பூயாத்**
**நித்யஸ்ரீர் நித்ய மங்களம்॥**